**07.07.2026**

**அசல் வழக்கு எண். 63 /2020**

**பி.வா.சா. 1 –** திரு.சத்தியபாலன்

**சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

1. உங்கள் சொந்த ஊர் காரிகோவில் என்றால் சரிதான். நீங்கள் கான்ட்ரக்ட் தொழில் செய்பவர் என்றால் சரிதான். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் தகப்னார் பெயர் துரைராஜ் என்றால் சரிதான். உங்கள் ஊரில் முத்தாரம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலில் 2002 முதுல் 2005 வரை மேற்படி முத்தாரம்மன் கோவிலில் நிர்வாகியாக 1ஆம் வாதி சக்திவேல்முருகன் என்பவர் இருந்து வந்தார் என்றால் சரிதான்.

2. அதன் பின்பு உங்கள் தகப்பனாரும் பாலசுப்பிரமணியனும் நிர்வாகியாக இருந்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது யார் நிர்வாகியாக இருந்து வருகிறார் என்றால் வழக்கறிஞர் திரு.ஞானசேகர் அவர்கள் நிர்வாகியாக இருந்து வருகிறார். வாதிகள் தெற்கு தெருவில் குடியிந்து வருகிறார்கள் என்றால் தெற்கு தெருவிலும் தற்போது வடக்கு தெருவிலும் குடியிருந்து வருகிறார்கள். உங்கள் குடும்பம் வடக்கு தெருவில் உள்ளது என்றால் சரிதான்.

3. 1ஆம் வாதி தான் மேற்படி கோவிலில் 2010 ஆண்டு வரை சாமி ஆடி வந்தார் என்றால் சரிதான். அந்த கோவிலில் வருடம் ஒரு முறை கோடை விழா நடக்கும் என்றால் சரிதான். அதே போல் ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளி சிறப்பு புஜையும் மற்றும் திருவிளக்கு புஜையும் நடைபெறும் என்றால் முன்னாடி இல்லை தற்போது கோவில் கட்டி ஞானசேகர் தலைமையில் விளக்குபுஜையும் மாதாந்திர வெள்ளியும் பூஜை நடக்கும்.

4. 2002 முதல் 2005 வரை 1ஆம் வாதி நிர்வாகம் செய்த போது மாதாந்திர வெள்ளி பூஜையும் திருவிளக்குபூஜையும் நடைபெற்றது என்றால் சரியல்ல. 1ஆம் வாதி BJB யில் மாவட்ட செயற்குழு உறுப்பினராக இருந்து வந்தார் என்றால் சரியல்ல RSS ல் பொறுப்பில் இருந்து வந்தார். உங்கள் தகப்பனார் நிர்வாகத்தில் இருக்கும் போது இளைஞர்கள் அனைவரும் சேர்ந்து திருவிளக்கு பூஜை செய்ய

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.07.07 17:33:56 +0530

வேண்டும் என்று கேட்டார்கள் என்றால் சரிதான் அந்த சமயம் உங்கள் தகப்பனார் திருவிளக்கு பூஜை செய்ய மறுத்தார் என்றால் சரியல்ல திருவிளக்கு பூஜை நடைபெறவில்லை. திருவிளக்கு பூஜை செய்ய உங்கள் தகப்பனார் மறுத்த காரணத்தினால் 1 ஆம் வாதி உங்கள் தகப்பனாரை அனுகி திருவிளக்கு பூஜை செய்ய வற்புறுத்தினார் என்றால் சரியல்ல. அதனால் உங்கள் குடும்பத்திற்கும் 1ம் வாதி குடும்பத்திற்கும் மனஸ்தாபம் உண்டு என்றால் சரியல்ல.

5. கோவிலில் 6 வரிதாரரிடம் இருந்து வரி வாங்க நிர்வாகம் மறுத்தது என்றால் சரியல்ல. அந்த சமயமும் 1ம் வாதி உங்கள் தந்தையிடம் மேற்படி 6 நபர்களிடம் வரி வாங்க வேண்டும் என்று பேசினார் என்றால் சரிதான். வரி வாங்க மறுத்துவிட்டார் என்றும் கோவிலில் வந்து கொடுக்க சொன்னார் என்றால் சரிதான். அதனால் உங்கள் குடும்பத்திற்கும் வாதி குடும்பத்திற்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

6. திசையன்விளை ரோட்டின் ஓரத்தில் 1ம் வா திக்கும் தோட்டம் உள்ளது என்றால் சரிதான். அந்த தோட்டத்தின் அருகில் சாலை விஸ்திரிப்புசெய்தார்கள் என்றால் சரிதான். அந்த தோட்டத்தின் அருகில் முதுமொத்தான் பஞ்சாயத்தில் இருந்து குடிநீர் ஆழ்துளை கிணறும் மோட்டர் பம்பு செட்டும் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பகுதி 1ம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அமைக்கப்பட்டதாக கண்டு அதனை அப்புறப்படுத்த வள்ளியூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.எண். 49/1999 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றும் அது 1ம் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகி பஞ்சாயத்தில் இருந்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வரை மேல்முறையீடு தாக்கல் செய்து அவருக்கு எதிராக தீர்ப்பாகி உள்ளது என்றால் தெரியாது.

7. சாலை விஸ்திரிப்பு செய்வதற்கு 1ம் வாதி இடையூறு செய்வதாக கூறுவது பொய் என்றும் பஞ்சாயத்துதான் 1ம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்து அது சம்பந்தமாக வழக்கு நடைபெற்றது என்றால் சரியல்ல. முத்தாரம்மன் கோவில் தெற்கு பக்கம் பொது இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் அரசு ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு கட்டி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதில் அவர்கள் வீடு கட்டும் போது நீங்கள் மற்றும் உங்கள் தகப்பனார் தடுத்தீர்கள்

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.07.07 17:34:03 +0530

என்றும் அந்த சமயம் 1ம் வாதி அவர்களுக்கு சாதகமாக இருந்ததால் அவருக்கும் உங்களுக்கும் மனஸ்தாபம் இருந்தது என்றால் சரியல்ல.

8. வாதிகள் மீது 18.12.2010 ம் தேதி நீங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் வாதிகள் இருவரையும் கைது செய்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு மூன்று நாட்கள் கழித்து தான் பிணையில் வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களை கைது செய்யும் போது கை விலங்கிட்டு காவல் வாகனத்தில் அழைத்து சென்றார்கள் என்றால் தெரியாது. நீங்கள் பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதல் வாதிகளின் நற்பெயருக்கு களங்கம் எற்பட்டது என்றால் சரியல்ல.

9. அந்த குற்ற வழக்கில் பொன்ராஜ், தேவராஜ், சுரேஷ், செந்தூர் திலகம், முருகன் ஆகியோர்களை விசாரணை செய்யபபட்டது என்றால் சரிதான். அதில் பொன்ராஜ், சுரேஷ் உங்கள் நண்பர் என்றால் சரிதான். தேவராஜ் என்பவர் உங்கள் தங்கை பானுமதியின் கணவர்என்றால் சரிதான். முருகன் என்பவர் உங்கள் சித்தப்பா வரதராஜன் என்பவரின் மகன் என்பவர் என்றால் சரிதான். செந்தூர்திலகம் உங்கள் வீட்டு மேற்கு பக்கம் உள்ளார் என்றால் சரிதான்.

10. செந்தூர்திலகம் ரேடியோ செட் வைத்து தொழில் செய்கிறார் என்றால் சரிதான். முத்தாரம்மன் கோவிலுக்கும் அவர்தான் ரேடியோ செட் அமைப்பார் என்றால் சரிதான். நீங்களும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களும் சேர்ந்து வாதிகள் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அதன்அடிப்படையில் வாசாஆ. 1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும் உங்கள் துண்டுதலின் பேரில் வாதிகளை அசிங்கபடுத்த வேண்டும் என்று காவல்துறையினர் வாதிகளை கைவிலங்கிட்டு அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. அந்த குற்ற வழக்கு விசாரணைக்கு முன்பு 15.05.2019 அன்று விடுதலை செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு விடுதலை செய்த பின்பு வாதிகளுக்கு ஏற்பட்ட இழப்பீடுக்கு இழப்பீடு கோரி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நீங்கள் பதில் அறிவிப்பு அனுப்பனீர்கள் என்றால் சரிதான். வழக்கு விபரங்கள்

CHANDRASEKAR ASHOK KUMAR
Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.07.07 17:34:11 +0530

என்றும் தெரியாது என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதிகளை வேண்டும் என்றே அவர்களுக்கு இருந்து வரும் நற்பெயரை களங்கபடுத்த வேண்டும் என்ற கெட்டஎண்ணத்தில் பொய் வழக்கு தாக்கல் செய்து கேவலப்படுத்தி 9 வருடங்களாக மேற்படி வழக்கிற்கு அழைத்துள்ளார் என்றும் அதனால் அவருக்கு எற்பட்ட மான நஷ்டத்திற்கு இழப்பீடு கோரி தாக்கல் செய்த வழக்கை அனுமதிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u> இல்லை**

CHANDRASEKAR ASHOK KUMAR

Digitally signed by CHANDRASEKAR ASHOK KUMAR
Date: 2026.07.07 17:34:17 +0530